யும் ஏற்படுவதால் அல்ல. உடனடியாக அங்கே வாகனங்களைக் கொண்டுவந்து அங்கேயிருந்து பெரிய மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் சொல்வதுபோல் அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் இறக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 405, டாக்டர் க. கோபால். மாண்புமிகு மக்கள் நல்லவாழ்வுத் துறை அமைச்சர்.

405—

வடகுடியில் தாய்-சேய் நல விடுதி அமைத்தல்.

*17051—டாக்டர் க. கோபால்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, வடகுடி பஞ்சாயத்து, வடகுடியில் ஒரு தாய்-சேய் நல விடுதி அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நன்னிலம் தொகுதி வடகுடியில் ஒரு தாய்-சேய் நல விடுதி அமைத்துத் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இப்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடகுடி பஞ்சாயத்து திரளான மக்கள் தொகை கொண்ட பஞ்சாயத்து. அதைச் சுற்றியுள்ள நெம்மேலி, வலம்பா பஞ்சாயத்துக்களிலும் நிறைய குக்கிராமங்கள் இருக்கின்ற காரணத்தால் மழைக் காலங்களில் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எல்லாம் நன்னிலம் மருத்துவமனைக்கு வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. மழைக்காலங்களிலும், விவசாயக் காலங்களிலும் சாலை வசதி சரியில்லாத காரணத்தால் அவர்கள் சுமார் 10 முதல் 15 கிலோ மீட்டர் சாலையைச் சுற்றித்தான் வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதுபோன்ற சமயங்களில் ஒரு தாய்-சேய் நல விடுதி அமைத்து ஒரு கிராமச் சுகாதார செவிலியரையும் பணியமர்த்தினால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மருத்துவ வசதி பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் வருகிற நிதியாண்டிலேயாவது அந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5,000 மக்கள் தொகை கொண்ட ஒரு கிராமத்திற்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் என்ற வகையில் அரசு நடவடிக்கை எடுத்து இப்போது எல்லா இடங்களிலும் அமைத்திருக்கிறது. இந்த இடத்தைப் பொறுத்தவரையிலே, இந்த கிராமத்திற்கு அருகிலேயே அச்சுதமங்கலம் என்ற ஊரில் ஒரு துணைச் சுகாதார நிலையம் இருப்பதாகத் தகவல் தந்திருக்கிறார்கள். ஒருவேளை நாம் வைத்திருக்கிற நார்ம்ஸ்-க்குள்ளே அது வராமல் இருந்தால் அதை நாம் அமைப்பது சிரமமாக இருக்கும். எனவே, வருகிற ஆண்டில் அந்த நிலைமையைப் பார்த்து, ஆய்வு செய்து ஜனத்தொகை அதிகமாக இருக்குமேயானால் அதற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 406, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

406—

ஈரோட்டில் தனி இரயில்வே டிவிசன் அமைத்தல்

*11415—திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் தனி இரயில்வே டிவிசன் அமைக்க மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக வசதி கருதி பாலக்காடு இரயில்வே டிவிஷனிலிருந்து திருவனந்தபுரம் இரயில்வே டிவிஷன் பிரிக்கப்பட்டது போலவும், மைசூர் இரயில்வே டிவிஷனில் இருந்து பெங்களூர் டிவிஷன் பிரிக்கப்பட்டது போலவும், கரூர்-திண்டுக்கல்-மதுரை- தூத்துக்குடி அகல இரயில் பாதை ஆரம்பித்துவிட்டதால் பாலக்காடு டிவிஷனுடைய கிலோ மீட்டர் தூரம் அதிகமாவதால் ஏற்படுகிற நிர்வாகச் சிரமங்களும், தேக்க நிலையும் தீர்க்கப்பட்டு துரிதமாக நிர்வாகம் செயல்படுவதற்கும், அதிகாரிகள், தொழிலாளர்களுக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும், பெண்களுக்கான கோட்டாவும், முன்பதிவு வசதிகள்